வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.09.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 273 பக்கங்கள் : 08




# மன்னாரில் மக்களின் இயல்பு நிலை ஸ்தம்பிதம்

- பேரணியில் ஆயிரக்கணக்கானோர் திரள்வு
- வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன
- தனியார் போக்குவரத்தும் நிறுத்தம்



மன்னார், செப்ரெம்பர் 30

**காற்றாலை மின் திட்டம், கனிய மணல் அகழ்வு என்பவற்றுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள்மீது பொலிஸார் நடத்திய தாக்குதலை கண்டித்தும் மன்னார் நேற்று திங்கட்கிழமை முழுமையாக முடங்கியது. இதே நேரம், நேற்றைய கண்டன பேரணியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.**

மன்னாரில் கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த நிலையில், காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைக் கண்டித்தும் இந்தத் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மன்னார் பிரஜைகள் குழுவால் நேற்றைய தினம் பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதன்படி, மன்னார் நகரம் மற்றும் முக்கிய பகுதிகள் அனைத்திலும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. அத்துடன், தனியார்

07







## சர்வதேச நீதி கோரி நேற்றும் உண்ணாவிரதம்

- இ. ராஜ்குமார் -

யாழ்ப்பாணம், செப். 30

தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்கள், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிய உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

செம்மணியில் நடைபெற்று வரும் இந்தப் போராட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் சுழற்சி முறையில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

07

## குண்டு வெடித்ததில் இருவர் படுகாயம்!

கிளிநொச்சி, செப். 30

மோட்டார் குண்டை பிரித்து அதிலிருந்த வெடிமருந்தை எடுக்க முயன்றபோது, அது வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி - ஆனையிறவு - தட்டுவன்கொட்டி பகுதியில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் - தென்மராட்சி - கச்சாயை சேர்ந்த சிங்கராசா அனுராஜ் (வயது 26), கேதீஸ் (வயது 50) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

07

## மன்னார் போராட்டம் மூலம் அரசுக்கு வலுவான செய்தி!

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

"காற்றாலை மின் திட்டம், கனிய மணல் அகழ்வு என்பவற்றுக்கு எதிரான மன்னார் மக்களின் கூட்டுக்குரல் மூலம் அரசாங்கத்துக்கு ஒரு வலுவான செய்தி அனுப்பப்பட் டுள்ளது", என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்களை தொடர்வதற்கு முன்னதாக மதத் தலைவர்கள் போராட்டக்காரர்களின்

07

## யாழ். பொருளாதார நிலையம் இன்று மீள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செப். 30

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மீள அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வர்த்தக - வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க, வர்த்தக வாணிப பிரதி அமைச்சர் ஆர். எம் ஜெயவர்த்தன, கூட்டுறவு அபிவிருத்தி பிரதி

07

## மிகஆபத்தான மெபெட்ரோன் போதைப்பொருள் கைப்பற்றல்

கொழும்பு, செப். 30

நாட்டில் முதன்முறையாக மிகவும் ஆபத்தான போதைப்பொருளான 'மெபெட்ரோன்' (Mephedrone) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனுடன், தொடர்புபட்டவர் என்ற அடிப்படையில் வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போதைப்பொருள் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போதைப்பொருள் நாட்டில் கண்டு

07

## அர்ச்சுனா எம்.பி.க்கு பிணை!

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை வாக்குமூலம் அளிப்பதற்காக கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு சென்றபோது அவர் கைது செய்யப்பட்டார்.

அண்மையில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் அர்ச்சுனா பொலிஸ் அதிகாரி ஒருவரின்

07

## அர்ச்சுனாவை சந்தித்த நாமல்!

கொழும்பு, செப். 30

அர்ச்சுனா எம். பி. கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அவரை நீதிமன்றில் நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார் என்று அறிய வருகிறது. இது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட அர்ச்சுனா கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர், நாமல் ராஜபக்ஷ அரச்சுனாவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பை அர்ச்சுனாவும் உறுதிப்படுத்தியுள்ளார். (ஐ)

## சிங்களவர் தமது தலைவரை காட்டிக்கொடுத்துவிட்டனர்!

### அர்ச்சுனா எம். பி. சொல்கிறார்

கொழும்பு, செப். 30

"சிங்கள மக்கள் தமக்காக சேவையாற்றிய மகிந்த ராஜபக்ஷவை காட்டிக் கொடுத்துள்ளனர். எனது கடவுள் பிரபாகரன் என்பதை அச்சமின்றி கூறுகிறேன்.", என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பிரபாகரன் எனது கடவுள் என்பதே எனது

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் மீது மீண்டும் கட்டவிழும் அரச பயங்கரவாதம்

## மன்னார் சம்பவம் குறித்து சிறீகாந்தா

யாழ்ப்பாணம், செப். 30

**மன்னாரில் தமது இருப்பின் உரிமைக்காக போராடும் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை வன்முறையானது மீண்டும் தமிழ்மக்கள் மீது அரங்கேற்றப்பட்ட அரச பயங்கரவாதத்தின் அப்பட்டமான வெளிப்பாடு என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.**




யாழ்ப்பாணம் மாட்டின் வீதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் - மன்னார் காற்றாலை மின் திட்டத்துக்கு எதிரான அந்த மாவட்ட மக்களது உண்மையான - நீதியான போராட்டத்தை அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் அது சட்ட விரோதமானது எனக் கருதியிருந்தால் அதில் ஈடுபட்ட மக்களை சட்ட ரீதியாக கைது செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவர்களை தாக்குவதற்கும் காயங்களை ஏற்படுத்துவதற்கும் அரசுக்கு எந்த அதிகாரமும் இருக்க முடியாது.

அநுர தலைமையிலான அரசு பதவியேற்று ஒரு வருடம் நிறைவுக்கு வரும் இந்த சூழ்நிலையில், அரசு நடத்தி இருக்கிற இந்த காட்டு தர்பார் என்பது, அரசுக்கு எதிரான ஜனநாயக ரீதியான போராட்டங்கள், பாரிய அளவில் பரந்து விரிவடையும் பொழுது அரசு அவை தொடர்பில் எந்தகைய அணுகுமுறையை கையாளும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவே நாங்கள் கருதுகிறோம்.

அத்துடன் இந்த அடாவடியை அங்கீகரிக்கவோ அல்லது ஆமோதிக்கவோ ஜனநாயகத்தை - மக்களது அடிப்படை உரிமைகளை மதிக்கின்ற எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கம் இந்த பிரச்னையை நிதானமாக கையாள இந்த அரசு முனைந்திருக்க வேண்டும்.

உண்மையில் என்ன நடந்தது என்பதை ஆராய்ந்திருக்க வேண்டும்.

குறிப்பாக அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் ஒரு எல்லையைத் தாண்டுமாக இருந்தால் அரசாங்கம் தன்னுடைய பலத்தை மக்கள் மீது பிரயோகிக்க தயங்காது என்பதை அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என கோருகின்றேன்

இப்பொழுது கூட நேரம் கடந்து விடவில்லை. அரசாங்கம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகளை அழைத்து பேசி தன்னுடைய நிலைப்பாட்டில் கூட அவர்களுக்கு எடுத்துரைத்து ஒரு நிதானமாக தீர்வுக்கு வர முடியும். - என்றார். (அ-3-5)

# ஆவண பட திரையிடலும் கவிதை நூல் அறிமுகமும்


யாழ்ப்பாணம், செப். 30

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட "நீதிக்காக நீண்ட காத்திருப்பு" எனும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும் செம்மணி தொடர்பான கவிதைகள் "வாச விலே கிருஷாந்தி" என்னும் நூல் அறிமுக நிகழ்வும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தில் வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் பி. நேருஜன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சனசமூக நிலையத்தின் செயலாளர் தர்ஷன் நூல் மதிப்பீட்டு உரையை ஆற்றினார். (ஐ)

# யானைகள்-மனிதர்கள் முரணற்ற வாழ்வை வலியுறுத்தும் கையெழுத்து பெறும் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப். 30

யானைகள், மனிதர்களிடையேயான முரணற்ற வாழ்வை வலியுறுத்தும் கையொப்பம் பெறும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை காட்டு யானைகள் பாதுகாப்பு சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகர் பகுதியில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

"உங்கள் பேராசைக்காக யானைகளைக் கொல்லாதீர்கள்" எனும் தொனிப்பொருளில் நேற்று ஆரம்பமான கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடரவுள்ளது.

இதில் பல்வேறு தரப்பினரும் கையொப்பங்களை பதிவு செய்தனர். (ஐ)

# குரங்குகளுக்கு நோய் பரவல்!



கொழும்பு, செப். 30

பொலனறுவை மற்றும் கிரித்தலே பகுதிகளில் குரங்குகளிடையே ஒருவகை நோய் பரவி வருவதாக வனவிலங்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நோய் மனிதர்களுக்கும் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை புனித நகரைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் கட்டுப்பாடின்றி திரியும் குரங்குகள் இருப்பதால், இந்த நோய் பரவும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

பொலனறுவை மற்றும் கிரித்தலேயில் உள்ள குரங்குகளின் அதிகப்படியான எண்ணிக்கைப் பிரச்னை நீண்டகாலமாக நீடித்து வரும் மற்றும் தீர்க்கப்படாத ஒரு பிரச்னையாகும்.

இந்த ஆபத்து இருந்தபோதிலும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு மிகக் குறைவாகவே உள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தவும், நோய் என்னவென்று கண்டறியவும் வன விலங்கு அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது நோய்வாய்ப்பட்ட குரங்குகளுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டு, மாதிரிகள் பரிசோதனைக்காக சேகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வவுனியா தெற்கு பிரதேச சபையில் இனி டிஜற்றல் முறையில் கட்டணம்!


வவுனியா, செப். 30

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் 'கௌபே' (Gov pay) திட்டம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சால் ஒன்லைன் மூலமாக பணம் செலுத்தும் திட்டமான கௌ பே திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையும் இணைந்துள்ளது. பொதுமக்கள் தமது கட்டணங்களை இனி இங்கு டிஜிற்றல் முறையில் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# வீதியில் மணலை கொட்டி விட்டு தப்பிச் சென்ற கடத்தல்காரர்கள்!



யாழ்ப்பாணம், செப். 30

பளை சோரன்பற்று பகுதியின் பிரதான வீதியில் அதிகளவான மணல் வீதியில் பரவப்பட்டு காணப்படுகின்றது. இதனால் அவ்வீதி ஊடாக பயணம் செய்பவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறித்த வீதியில் அதிகளவான மணல் பரவி காணப்படுவதால் விபத்துக்கள் இடம்பெற அதிக வாய்ப்பு காணப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு மணல் கடத்தல்காரர்கள் பொலிஸாரிடமிருந்து தப்பிக் கொள்வதற்கு மணலை குறித்த வீதியில் கொட்டி விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

நாளாந்தம் வடமராட்சி கிழக்கில் இருந்து தமது கிராமம் ஊடாகவும், தமது கிராமத்தில் இருந்து ஏனைய இடங்களுக்கும் அதிகளவான மணல் சட்டவிரோதமாக கடத்தப்படுவதாகவும் பொலிஸார் இதனை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வும் சோரன்பற்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-05)

# பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் வெளிநடப்பு!

வடமராட்சி, செப். 30

பருத்தித்துறை பிரதேச சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றைய தினம் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

சபையின் மாதாந்த அமர்வு நேற்று காலை 9 மணியளவில் தவிசாளர் யுகதீஸ் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. அது, திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, சுயேச்சை உறுப்பினர் என 10 பேர் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு செய்தபோதிலும் ஆளும் கட்சியினர் தொடர்ந்து கூட்டத்தை நடத்தினர். (ஐ-02-03-05)

# வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினராகிறார் சிவாஜி?

வடமராட்சி, செப். 30

வல்வெட்டித்துறை நகர சபையின் உறுப்பினராக எம். கே சிவாஜிலிங்கம் பதவியேற்க வுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய பேரவையாக போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பட்டியல் உறுப்பினராக எம். கே சிவாஜிலிங்கம் பெயரிடப்பட்டிருந்தார்.

தேர்தல் முடிவுகளின்படி, பட்டியல் உறுப்பினராக பெண் உறுப்பினர்களையே தெரிவு செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தமையால் தமிழ்த் தேசிய பேரவையின் பட்டியல் வேட்பாளரான சிவாஜிலிங்கத்தால் உறுப்பினராக முடியவில்லை.

இந்தநிலையில், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்தமையால், அந்த வெற்றிடத்துக்கு சிவாஜிலிங்கம் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிய வருகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.09.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஜே.வி.பி. பற்றிய அமெரிக்காவின் அவதானம்

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இலங்கையின் நிலைமை வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஏற்புடையதாக இல்லையென்று எடுத்துரைக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் மேற்குலகம் முற்றிலும் நம்பிக்கை கொள்ளவில்லை என்பதற்கு மேற்படி அறிக்கை ஓர் ஆதாரமாகும். முன்னேற்றங்களை அவதானித்தாலும்கூட, மேற்குலக முதலீடுகளைக் கவரும் வகையில் முன்னேற்றங்கள் போதாது என்பதையே குறித்த அறிக்கை எடுத்துரைக்கிறது.

குறித்த அறிக்கையில், சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் ஒரு விடயம் மிகவும் முக்கியமானது. அதாவது, முதலீட்டாளர்கள் மத்தியில் தயக்கங்கள் காணப்படுவதற்கு ஜே. வி. பியின் வரலாற்று ரீதியான மேற்குலக எதிர்ப்பும் மார்க்சிய கருத்தியலை முன்வைக்கும் அதன் கடந்தகாலமும் ஒரு காரணமாகும் என்று இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஜே. வி. பியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஒரு யதார்த்தவாதியாகத் தன்னை காண்பித்துக் கொள்ளும் நிலையிலேயே மேற்படி அறிக்கை வெளியாகியிருக்கிறது. ஜனாதிபதி மட்டும் யதார்த்தவாதியாக இருந்து பயனில்லை. அவருடன் இணைந்து செயல்படும் ஜே. வி. பியின் தீர்மானிக்கும் உயர்பீடம் எவ்வாறு சிந்திக்கிறது? இப்போதும் பழைய சிவப்பு சிறைக்குள்தான் இருக்கிறதா அல்லது முன்னோக்கிச் சிந்திக்கும் திறனுடன் இருக்கிறதா என்பதுதான் அடிப்படையானது. மாற்றங்களை சொல்லில் காட்சிப்படுத்துவது ஒன்று, அதனை செயலுக்கு மாற்றுவது இன்னொன்று. ஜே. வி. பி. உண்மையிலேயே, பல விடயங்களில் மாறியிருக்கிறதா என்பதை செயலின் மூலம்தான் உலகம் அறிந்து கொள்ளும். மாற்றங்களை செயலில் காண்பிக்காத நிலையில்தான் அமெரிக்கா இவ்வாறானதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

ஜே. வி. பி. அறுபது வருட இடைவிடாத உழைப்புக்கு பின்னர் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான இந்தக் காலத்தில் ஜே. வி. பி. விதைத்த விடயங்களை இலகுவில் உலகம் மறந்துவிடப் போவதில்லை. அதிகாரப் போட்டி அரசியலில் ஒவ்வொரு சக்தியும் தங்களின் நலன்களுடன் ஒத்துப்போகும் ஆட்சியாளர்களையே காதலிக்கின்றனர். அந்தக் காதல் சிலநேரங்களில் ஊடலாகவும் கூடலாகவும் திடீரென்று முற்றிலும் வெறுப்பாகவும் மாறும் வகையிலேயே அமைந்திருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளும் காலத்துக்குக் காலம் பல்வேறு கொள்கைகளை முன்னெடுத்தாலும் ஓர் எல்லைக்கு மேல் பலம்பொருந்திய சக்திகளுடன் ஒத்துழைத்தன. இந்த அதிகாரப் போட்டியில் இந்தியாவை முற்றிலுமாகப் புறக்கணித்துச் செயல்பட முற்பட்டபோதுதான் அந்த நாட்டின் அழுத்தங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

இறுதியில் இந்தியாவுடன் ஒத்துப்போகும் தீர்மானத்தை மேற்கொண்டு ஜே. ஆர். அந்தப் பொறியிலிருந்து தப்பினார். ஒருவேளை தொடர்ந்தும் இந்தியாவுடன் மோதும் தீர்மானத்தை ஜே. ஆர். எடுத்திருந்தால் இப்போது வடக்கு - கிழக்கு இந்தியாவின் படைக் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்திருக்கும். ஆனால், நிலைமைகளை கணிப்பிட்டு விடயங்களைத் தந்திரமாகக் கையாண்டதால் நிலைமைகள் கொழும்பின் பிடிக்குள்ளேயே இருந்தன. ஆனால், விடயங்களை சரியாக கணிக்கத் தவறியதால் தமிழர் தரப்பு இந்தியாவின் நட்பை இழந்து போனது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாக மேற்குலக - இந்திய எதிர்ப்பை கொள்கையாக வரித்துக் கொண்டிருந்த - அதற்காகத் தொடர்ந்தும் செயல்பட்டு வந்த ஜே. வி. பி. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கிறது. இந்த நிலையில் இந்த ஆட்சியை முழுமையாக நம்பலாமா என்னும் நிலைமை இருப்பதானது ஆச்சரியமான ஒன்றல்ல. எங்களை நம்பலாம் என்பதை ஜே. வி. பி.தான் நிரூபிக்க வேண்டும்.

# இலங்கை மருந்துத்துறையில் இறக்குமதியாளர்கள் ஆதிக்கம்

## உள்ளூர் உற்பத்தி பெரும் பாதிப்பு

கொழும்பு, செப். 30

இலங்கையின் மருந்துத் துறையில், 80 சதவீதமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு நாடளாவிய ரீதியாக விநியோகிக்கப்படுகின்றன.

இறக்குமதியாளர்கள் ஆதிக்கம் செலுத்துவதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஔடத சந்தையில் இறக்குமதியாளர்களுடன் போட்டி போட முடியாத நிலையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் சுகாதார அமைச்சிற்கும் இடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளது.

இது தொடர்பில் கைச்சாத்தான இந்த ஒப்பந்தத்தை 2030 ஆம் ஆண்டுவரை நீடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நிலையில்,

அதன் மூலம் எதிர்வரும் வருடங்களில் இலங்கை சிறப்பான நன்மையை பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# சிறீலங்கன் விமான சேவையின் பயணிகள் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 30

2025 முதல் 2026 வரையான நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் சிறீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பயணிகள் வருமானம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளது.

தமது விமானங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் 22 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சிறீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் விமான சேவையின் செயற்திறன் 74 வீதமாக அதிகரித்துள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் இது 69 வீதமாக பதிவாகியிருந்தது.

இதேவேளை, இயந்திரக் கோளாறு காரணமாக நீண்ட காலமாக சேவையிலிருந்து நீக்கப்பட்ட 02 விமானங்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருட ஆரம்பத்தில் மற்றுமொரு விமானம் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் சிறீலங்கன் விமான சேவை நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# பல்கலைகளில் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, செப். 30

அரச பல்கலைக்கழகங்களில் இன்று ஒரு நாள் அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

வேதன முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துக் குறித்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

(அ)

# வற் வரி திட்டத்தை இரத்து செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இறப்பர் வர்த்தகர்கள் குழு எதிர்ப்பு!

கொழும்பு, செப். 30

எளிதாக்கப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டத்தை இரத்து செய்யும் அரசாங்கத்தின் தீர்மானம் கடுமையான மற்றும் தொலைநோக்கு விளைவுகளை ஏற்படுத்தும் என இலங்கை இறப்பர் வர்த்தகர் குழு தெரிவித்துள்ளது.


எளிதாக்கப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் இரத்து செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தநிலையில், செயற்பாட்டு நிதியை மீளப் பெறும் வழிமுறை இன்றி எளிதாக்கப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் இயற்கை இறப்பர் தொழிற்துறை பரவலான நிதி நெருக்கடியை எதிர்கொள்ளுமென குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், சிறு தொழில் உரிமையாளர்களின் வாழ்வாதாரம், ஏற்றுமதி போட்டித்தன்மை மற்றும் அந்நிய செலாவணியை அச்சுறுத்தும் என இலங்கை இறப்பர் வர்த்தகர் குழு தெரிவித்துள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கடகம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சின்னச் சின்ன சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**சிம்மம்**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் ஆலோசனை ஏற்கப்படும்.

**கன்னி**

கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**துலாம்**

குடும்பத்தில் உள்ள வர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். மறைமுக அவமானம் வந்து நீங்கும்.

**மகரம்**

அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**

எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மீனம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

# இராணுவக் காணியிலிருந்து கலைந்த குளவிகள் தாக்கியதில் 6 பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

## தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதி

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு, விசுவமடுவில் நேற்றுக் காலை விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மற்றும் விசுவமடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மாணவர்கள் மீது குளவி தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

12ஆம் கட்டை தபால் நிலைய வீதிப் பகுதியில் இராணுவத்தினரால் தோட்டம் செய்யப்படும் காணியிலுள்ள மா மரத்தில் இருந்த குளவிகள் கலைந்து மாணவர்களை குற்றியதன் காரணமாக 6 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த மாணவர்கள் உடனடியாக தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குளவி தாக்குதலுக்குள்ளான மாணவர்களின் நலன் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

(எ)

# துண்டுப் பிரசுர சம்பவத்துக்கும் எமக்கும் எந்தத்தொடர்பும் இல்லை

## அமைச்சர் சந்திரசேகர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 30

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இறுதி நாளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த சம்பவத்துக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒரு வார காலமாக திலீபன் நினைவேந்தல் நடைபெற்றது. அங்கு அனுஷ்டிப்பை செய்ய நாங்கள் சென்றபோது தடுக்கப்பட்டோம். அதன் பிறகு சில தினங்களுக்கு முன்னர் இறுதி நாள் நினைவேந்தல் நடந்து முடிந்தது. அன்று யாரோ ஒருவர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாகவும் அவர் மீது தங்கள் வன்முறையை கஜேந்திரகுமார் அணி கையாண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது. இதில் எந்த பங்களிப்பும் கிடையாது. அந்த அளவுக்கு கீழ்த்தரமான வேலை எம்மிடம் கிடையாது.

மனிதனை அனுஷ்டிப்பதற்கோ, போராடுவதற்கோ, கருத்து சொல்வதற்கோ பூரணமான சுதந்திரம் இருக்கின்றது. ஊடக சுதந்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி கருத்து சுதந்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி முன்னரை விட தற்போது அதிகமாக இருப்பதனாலேயே, சமூக வலைத்தளங்கள் அனைத்திலும் எமக்கு எதிராக பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

போராடுவதற்கான உரிமை இருப்பதன் காரணமாகவே கடந்த காலங்களை போன்று புலனாய்வுப் பிரிவினராலும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் எந்தவித இடையூறும் ஏற்படவில்லை. இதன் காரணமாகவே இந்த வன்முறையை கையாளுகின்ற கஜேந்திரகுமார் அணி எங்கள் மீது சேறுகளை வீசுகின்றார்கள்.

இந்த நபர்களுக்கு வேறு அரசியல் கிடையாது. இவர்களுக்கு இருக்கின்ற அரசியல் எங்கள் மீது சேறு வீசுவதை தவிர வேறு எதுவும் கிடையாது.- என்றார்.

(எ-03)

# உதைபந்தாட்ட தொடர் இறுதிப்போட்டியில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணி வெற்றி

மன்னார், செப். 30

மன்னாரில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணி வெற்றி பெற்றது.

மன்னார் பனங்கட்டுகொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் தர்மலிங்கம் மனோன்மணி தம்பதிகளின் நினைவாக நடைபெற்ற உதைபந்தாட்டத் தொடரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை புனித சூசையப்பர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில், நடைபெற்ற இறுதிப் போட்டியில் பனங்கட்டுக் கொட்டு சென் ஜோசப் அணியும் நானாட்டான் டைமன் ஸ்டார் அணியும் மோதின.

இதன்போது நானாட்டான் டைமன் ஸ்டார் அணி வெற்றி பெற்று முதலிடத்தையும் பனங்கட்டு கொட்டு சென் ஜோசப் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

தொடர்ந்து வெற்றிபெற்றவர்களுக்கு வெற்றிக்கேடயங்களும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், மன்னார் நகர சபை தவிசாளர் டானியல் வசந்தன், விளையாட்டு வீரர்கள், பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

(எ)

# "அராஜக நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்"

மன்னார், செப். 30

மன்னாரில் மதகுருமார்கள், மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு காணியுரிமைக்கான மக்கள் இயக்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கு எதிராக மக்கள் மேற்கொண்ட போராட்டத்தின் போது பொலிஸாரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனை வன்மையாக கண்டிப்பதாக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இ. முரளிதரன் தெரிவித்தார். இது போன்ற அராஜக நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)

# சைவப்புலவர் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 30

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த. குமரன் அறிவித்துள்ளார்.

சைவப்புலவர் பரீட்சையில் திருமதி செல்வநாயகி- தெய்வேந்திர மூர்த்தி - (கிளிநொச்சி), திருமதி அகிலா சிறிகுமார் (வவுனியா), திருமதி அமிர்தகலா சுதர்சன் (யாழ்ப்பாணம்), திருமதி ஜெயலோசனா சிவஞானசுந்தரம் (கொழும்பு) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளம் சைவப்புலவர் பரீட்சையில் குணராசா பாபு (கல்முனை), ராஜ்குமார் கனுஷ்சியா (வாழைச்சேனை), சண்முகம் கிதுர்சனா (மட்டக்களப்பு), ரவிக்குமார் குபேனிதர்ஷா (மட்டக்களப்பு) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு தேசிய ஒற்றுமை உருவாகவேண்டும்!

## ஜப்பானில் கூறினார் ஜனாதிபதி



கொழும்பு, செப். 30

**நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு, தேசிய ஒற்றுமையை உருவாக்க வேண்டும் எனவும், இலங்கை வரலாற்றில் எந்த இன மோதல்களும் தலைதூக்காத ஆண்டாக கடந்த வருடம் வரலாற்றில் இணைவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜப்பானில் வசிக்கும் இலங்கை சமூகத்தினருடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைவரும் எதிர்பார்த்த மாற்றத்துக்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிறுவுதல், சட்டத்தின் ஆட்சியை நிறுவுதல், ஊழல் மற்றும் மோசடி இல்லாத ஆட்சியை நிறுவுதல் மற்றும் அரச இயந்திரத்தை செயற்திறனுள்ள தாக்குதல் போன்ற மக்கள் எதிர்பார்க்கும் புதிய மாற்றங்களுக்கு அரசாங்கம் குறிப்பிடத்தக்க பணிகளை நிறைவேற்றியுள்ளது.

இன்று, நாட்டின் பொருளாதாரத்தை நாம் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஸ்தீரப்படுத்தியுள்ளோம்.

ஆனால் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

சிறந்த அரச சேவையை உருவாக்க தேவையான அடிப்படை நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம்.

ஒரு அரசு முன்னேற, வலுவான, நிலையான மற்றும் தெளிவான வெளிநாட்டு உறவுகள் அவசியம்.

கடந்த ஆண்டில், நமது இராஜதந்திர உறவுகளில் பராமரிக்கப்பட வேண்டிய சமநிலையை எம்மால் குறிப்பிடத்தக்க அளவில் பராமரிக்க முடிந்தது என்று நான் நினைக்கிறேன்.

இந்த அடிப்படைகளை நிறுவாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

மேலும், வெள்வேறு இனக் குழுக்கள் மற்றும் மதங்கள் நம் நாட்டில் வாழ்கின்றன.

அவர்களுக்கு அவற்றின் தனித்துவமான கலாசாரங்கள் உள்ளன.

எனவே, நமது நாடு பல்வேறு மக்கள் நிறைந்த நாடு.

நமது நாட்டை முன்னோக்கி நகர்த்த, இந்த மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கவேண்டும்.

ஆனால் நீண்டகால அரசியல் போராட்டத்தின் காரணமாக, இந்த மக்கள் பல்வேறு இன மோதல்கள் மற்றும் மத மோதல்களை உருவாக்குவதன் மூலம் ஒருவருக்கொருவர் அந்நியப்படுத்தப்பட்டனர்.

ஒருவருக்கொருவர் பிரிவினையையும் வெறுப்பையும் விதைக்கும் ஒரு நாடு முன்னேற முடியாது.

எனவே, நம் நாட்டில் உள்ள கலாச்சார பன்முகத்தன்மை, மொழி வேறுபாடுகள் மற்றும் மத வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளும் ஒருமித்த கருத்தைக் கொண்ட ஒரு அரசை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

சுற்றுலாத் துறையில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

2030 ஆம் ஆண்டுக்குள் 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து 8 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருளாதாரமாக மாற நாங்கள் எதிர்பார்க்கிறோம் -என்றார்.

(அ)

# சூழல்நேய சிறுவர்களை உருவாக்குவதே இலக்கு!

## பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 30

அனைத்து உயிரினங்களின் இருப்பையும் உறுதிப்படுத்தும் நிலையான சுற்றுச்சூழலை உருவாக்கி, கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் சூழல்நேயப் பாடசாலைகளையும், சூழல்நேயச் சிறுவர்களையும் உருவாக்குவதே அரசாங்கத்தின் தேசிய இலக்காகுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் மூன் நினைவு அருங்காட்சியகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ற வகையில் எமது தேசிய நோக்கு, அனைத்து உயிரினங்களின் இருப்பையும் உறுதிப்படுத்தும் நிலையான சுற்றுச்சூழலை உருவாக்குவதாகும்.

அது சாத்தியமாவதற்கு எமது நாட்டிற்கு வித்தியாசமான தலைவர்களும் வித்தியாசமான நாட்டு மக்களும் தேவைப்படுகின்றனர். அந்த மக்கள் இந்த நாட்டின் சுற்றுச்சூழல், விலங்குகள், கடல்கள் மீது மிகுந்த அன்பைக் காட்டும் உணர்வு மிக்க மனிதர்களாக இருக்க வேண்டும்.

அந்த வித்தியாசமான அல்லது மாற்றம் கண்ட மக்களை உருவாக்க, தேசிய மறுமலர்ச்சியை இலக்காகக் கொண்ட கலை மற்றும் கலாசாரத் துறையில் பலமான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் முடியும் என நாம் நம்புகிறோம்.

இந்த அருங்காட்சியகம் முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மாறி, அதன் மூலம் பேராதனை தாவரவியல் பூங்காவின் சுற்றுலா மதிப்பு மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்' எதிர்காலக் கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் சூழல்நேயப் பாடசாலைகளையும், சூழல்நேயச் சிறார்களையும் உருவாக்குவதே அரசாங்கத்தின் விசேட இலக்காகும்- என்றார்.

(அ)

# அமல் சில்வா பிணையில் விடுதலை!

கொழும்பு, செப். 30

முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மூன்று ஜீப்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் போலி எண்களின் கீழ் பதிவு செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் அவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

(அ)

# 664 பேர் கைது!

கொழும்பு, செப். 30

நாடு முழுவதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட குற்றத் தடுப்பு மற்றும் போதைப் பொருள் தடுப்பு விசேட நடவடிக்கையின் கீழ், நேற்று முன் தினம் 664 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இதன்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சோதனை நடவடிக்கையின் போது 28,778 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# திரிபோஷா உற்பத்தி இடைநிறுத்தம்!

கொழும்பு, செப். 30

இலங்கையில் திரிபோஷா உற்பத்தி கடந்த செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க தெரிவித்தார்.

உற்பத்திக்குத் தேவையான சோளம் கிடைக்காததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திரிபோஷா உற்பத்திக்காக 18,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் முன்னர் வழங்கப்பட்டிருந்தாலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் ஒப்புதலுக்கான திருத்தங்களை முன்வைத்தார்.

அந்த திருத்தங்கள் அடங்கிய புதிய அமைச்சரவை பத்திரம் ஒக்ரோபர் 07 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறும் வரை சோள இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, திரிபோஷா உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், ஒக்ரோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் சோளம் இறக்குமதி மீண்டும் தொடங்கியதும் திரிபோஷா உற்பத்தி இயல்பு நிலைக்குத் திரும்பும்-என்றார்.

# மாவனல்லையில் மண்மேடு சரிந்து விழுந்ததில் மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 30

மாவனல்லை, அளுத்நுவர, மாணிக்காவ பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் அதில் சிக்குண்டிருந்த மூன்று தொழிலாளர்களும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்று காலை மாவனல்லை, அளுத்நுவர, மாணிக்காவ பகுதியில் மதில் சுவர் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மூவர் மீது பாரிய மண்மேடு சரிந்து விழுந்து பணியில் ஈடுபட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். (அ)

# உதய கம்மன்பில இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, செப். 30

பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில நேற்றுக் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார்.

ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மாதாந்த சம்பளத்தை கட்சி நிதிக்கு மாற்றி மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து அவர் தெரிவித்தார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை தமது விருப்பப்படி செலவிட முடியாது என்று அவர் கூறினார்.

அதன்படி, 159 ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதத்துக்கு 03 கோடி ரூபாய்க்கு மேல் பெற்று அதை கட்சி நிதியில் வரவு வைத்து அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது பொது நிதியை தவறாகப் பயன்படுத்தும் செயலாகும் எனவும், இந்த விடயம் குறித்து விசாரணை நடத்த கோரியும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# மேல் மாகாண பாடசாலை மாணவரிடம் அதிகளவு போதைப்பொருள் பயன்பாடு!

கொழும்பு, செப். 30

நாட்டில் போதைப் பழக்கத்திற்கு அடிமையான பாடசாலை மாணவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ், தொட்டலங்க, கொம்பனி வீதி, அங்குலானை, வாழைத்தோட்டம், பாணந்துறை, தெஹிவளை, கல்கிஸ்ஸை, ஹிக்கடுவை மற்றும் பல இடங்களில் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் போதைப் பொருள் பாவனைக்கு ஆளாகி வருவதாகவும் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது.

மேலதிகமாக, கண்டி மாவட்டத்தில் சில பகுதிகள் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாக அதிக வாய்ப்புள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, குருநாகல், அனுராதபுரம், காலி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களும் ஆபத்தானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை போதைப்பொருள் குற்றங்களுக்காக 206 சிறுவர்கள் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் சிறுவர்கள் 39 பேர் நன்னடத்தையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் அதிகூடிய ஐஸ் போதைப்பொருள் மீட்பு!

மட்டக்களப்பு, செப். 30

கிழக்கு மாகாணத்தில் அதி கூடிய ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் அதி கூடிய ஐஸ் போதைப்பொருள் மட்டக்க ளப்பு, காத்தான்குடியில் கைப் பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப் பதிகாரி எஸ். ஏ. றஹீம் தெரி வித்தார்.

பொலநறுவை முஸ்லிம் கொலனியைச் சேர்ந்த 29 வயது டைய நபர் ஒருவரிடமிருந்து 51 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கொலனி பிரதேசத் திலிருந்து காத்தான்குடிக்கு விற் பனைக்காக குறித்த ஐஸ் போதைப் பொருளை கடத்தி வந்த போது பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப் பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் சுமார் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியா னது. மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

# ஆற்றோரம் அநாதரவாக கிடந்த பெண் குழந்தை மீட்கப்பட்டது

ஒலுவில், செப். 30

அம்பாறை மாவட்டம், ஒலு வில் பிரதேசத்தில் பிறந்து சில நாட்களான பெண் குழந்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவரால் கொடுக்கப்பட்ட தகவலுக்கமைய குழந்தை மீட்கப் பட்டு ஒலுவில் பிரதேச மருத்து வமனைக்கு கொண்டு செல்லப் பட்டது. பின்னர் அக்கரைப் பற்று ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அக்கரைப் பற்று பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட ஒலுவில் பிரதேசத்தில் இவ்வாறு மீட்கப்பட்ட குழந்தை ஆரோக்கியமான நிலையில் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளது.

குறித்த குழந்தையை பொலி ஸாரின் ஊடாக நீதிமன்றில் பாரப்படுத்த உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக மருத்துவமனை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (எ-01)



# சொகுசு கார் யானையுடன் மோதி விபத்து

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு, காத்தான்கு டியில் இருந்து அம்பாறை, பொத் துவில் நோக்கிப் பயணித்த சொகுசு கார் யானையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த சனிக்கிழமை இரவு 09. 00 மணியளவில் பொத்து வில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் ஊறணி காட்டுப் பகுதியில் யானையுடன் மோதுண்டு குறித்த கார் பலத்த சேதமடைந்ததுடன் அதில் பய ணித்த குடும்பத்தினர் தெய்வா தீனமாக காயங்கள் ஏதுமின்றி தப்பியுள்ளனர்.

மேலும் குறித்த பகுதிகளில் பிரதான வீதியில் மாலை மற் றும் இரவு நேரங்களில் யானை களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாக பயணிகள் தெரிவித்தனர். (எ)

# ஊழலுக்கு எதிரான போராட்டங்கள்: அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கிறோம்

## தமிழ் அரசு கட்சி எம். பி. சிறிநாத்

மட்டக்களப்பு, செப். 30

ஊழலுக்கு எதிரான போராட் டம் மற்றும் போதைப் பொருட் களுக்கு எதிரான போராட்டம், வன்முறையற்ற நிகழ்வுகளுக்கும் எங்களுடைய ஆதரவுகளை அர சாங்கத்துக்கு வழங்கி வருகின் றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறி நாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கோட்டைக் கல்லாறு பிறண்சிப் விளையாட் டுக் கழகம் நடத்திய கலாசார விளையாட்டு விழா கோட் டைக்கல்லாறு பொது விளை யாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கோட்டைக்கல்லாறு விளை யாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இது தொடர்பில் எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களிட மும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களிட மும் பேசியுள்ளேன். அதற்கு அவர்கள் ஒத்திசைவான பதில் களைத் தந்துள்ளார்கள். எதிர் காலத்தில் பாராளுமன்ற உறுப் பினர்கள் ஒன்றிணைந்து இந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நட வடிக்கைகளை விளையாட்டு அமைச்சினூடாகவும் எடுப் போம்.

விளையாட்டுத்துறைகள் எல்லாம் மாகாண சபைகள் ஊடாக அபிவிருத்தி செய்யப் பட வேண்டிய பொறுப்பு இருக் கின்றது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலே பல செயல்திட்டங்கள் முன்னெ டுக்கப்படுகின்றன. ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் போதைப்பொருட்களுக்கு எதி ரான போராட்டம், வன்முறை யற்ற நிகழ்வுகளுக்கும் எங்களு டைய ஆதரவுகளை வழங்கி வரு கின்றோம்.

எனினும், எமது மாவட்டத் தின் அபிவிருத்தி, அரசியல் தீர்வு போன்றன போதியளவாக இல்லை. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் முழுமையாக விடுவிக் கப்படவில்லை. அதற்கான நட வடிக்கைகள் மந்தகதியில் உள் ளன. மாகாண சபைத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண் டும் என அவர் மேலும் தெரிவித் தார். (எ)

# மூதூரில் படகு மூழ்கியதில் ஒருவர் மாயம்

மூதூர், செப். 30

திருகோணமலை, மூதூர் கடல் பிராந்தியத்திலிருந்து வெளிக்கடல் நோக்கிச் சென்று திரும்பியபோது, படகு ஒன்று மூழ்கியதில் மூதூர் தக்வா நக ரைச் சேர்ந்த ஜூனைது அனஸ் என்ற நபர் காணாமல் போயுள் ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 03. 00 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த படகில் இரு மீனவர் கள் சென்றிருந்த நிலையில் விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் ஒருவர் காணாமல் போன நிலை யில், மற்றொரு மீனவர் மிதக்கும் கலனின் உதவியுடன் மிதந்து வந்த நிலையில் மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப் பட்டதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

காணாமல் போனவர் 38 வய துடையவர் என்றும் மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ ரைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (எ)

# சுற்றுலா தின சிறப்பு நிகழ்வு

பொத்துவில், செப். 30

உலக சுற்றுலா தினத்தை சிறப்பிக்கும் வகையில் இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றம் ஏற்பாடு செய்த சுற்றுலா தின சிறப்பு நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை பொத்துவில் அறு கம்குடா நியு ரைஸ்டார் பீச் ஹோட்டலில் நடைபெற்றது.

"சுற்றுலா மற்றும் நிலையான மாற்றம்" எனும் தொனிப்பொரு ளிலில் இலங்கை சுற்றுலா மற் றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஜபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். அப்துல் வாசித் பிரதம விருந்தினராக கலந்து கொண் டார். அம்பாறை மாவட்ட பிர திப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல கௌரவ விருந்தின ராகவும் கிழக்கு மாகாண சுற்று லாப் பணியகத்தின் தவிசாளர் ஜீ. பிரியந்த, சுற்றுலாப் பணிய கத்தின் பொது முகாமையாளர் ஆர். ஞானசேகர் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். (எ-01)

# திருடிய வானை விற்பனை செய்து மோட்டார் சைக்கிள் கொள்வனவு

## காதலியுடன் ஊரை சுற்றிய இளைஞன் கைது

கண்டி, செப். 30

கண்டி பிரதேசத்தில் உள்ள வாகன விற்பனை நிலையத்திலி ருந்து திருடிய வானை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணத்தை பயன்படுத்தி மோட் டார் சைக்கிளை கொள்வனவு செய்து காதலியுடன் ஊரை சுற் றிய இளைஞன் ஒருவர் கண்டி தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி தலைமையக பொலி ஸாருக்கு கிடைத்த முறைப்பாட் டின் பேரில் மேற்கொள்ளப் பட்ட விசாரணையில் சந்தேக நபரான இளைஞன் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மாத்தளை - மாதிபொல பிரதே சத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரான இளைஞன் செப்ரெம்பர் 22 ஆம் திகதி கண்டி பிரதேசத்தில் உள்ள வாகன விற்பனை நிலையம் ஒன் றிலிருந்து வான் ஒன்றை கொள் வனவு செய்து அதனை மாத் தளை - பல்லேபொல பிரதேசத் தில் உள்ள அடகுக்கடை ஒன் றில் 15 இலட்சம் ரூபாய்க்கு விற் பனை செய்து அந்த பணத்தில் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை கொள்வனவு செய்துள் ளதாக பொலிஸ் விசாரணை யில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான இளைஞன் புதிய மோட்டார் சைக்கிளில் தனது காதலியுடன் ஊரை சுற் றிப் பார்த்துக்கொண்டிருக்கும் போது கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி தலை மையக பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# "ஊழல்-மோசடிகளுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கின்றோம்"

மட்டக்களப்பு, செப். 30

ஊழல் - மோசடிகளுக்கு எதி ராக நாங்கள் அதிகளவில் குரல் கொடுத்திருக்கின்றோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாட்டை திரைப்படம் போல வேதான் நடத்திக் கொண்டிருக் கின்றார்கள். நாட்டில் ஒவ்வொரு நாளும் எங்கேயோ ஓரிடத்தில் கைதுகள் இடம்பெற்றுக் கொண் டிருக்கின்றன. அதைப்பார்த்து எமது மக்களும் திருடர்களைக் கைது செய்கின்றார்கள், திருடர் களை சிறையிலே அடைத்து விடுகின்றார்கள் என சந்தோசப் படுகின்றார்கள். அது எங்களுக் கும் சந்தோசம்தான் எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு, கோட்டைக் கல்லாறு பிறண்சிப் விளையாட் டுக் கழகம் நடத்திய கலாசார விளையாட்டு விழா கோட்டைக் கல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத் திலே சொத்துக்களையும் வளங் களையும் கொள்ளையடித்தவர் களின் பட்டியலை வெளியிட்ட தில் பெருமளவான பங்கு எமக் கிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத் திலே இருக்கின்ற மணவளங்க ளைச் சூறையாடுவதைப்பற்றி, மட்டக்களப்பு மாவட்டத்திலே ஓர் இலட்சம் வேலைவாய்ப் பிலே மோசடி இடம்பெற்றது பற்றி, ஒப்பந்தங்கள் செய்து கொள்ளையடித்தது, போன்ற வற்றையெல்லாம் தொடர்ச்சி யாக வெளிப்படுத்தி வந்தவர் கள் நாங்கள்.

இந்த ஊழல்களுக்கு எதிராக நாங்கள் அதிகளவு குரல் கொடுத் திருக்கின்றோம். பன்முகப்படுத் தப்பட்ட நிதியை எவ்வாறு கையாள்வது என்றுகூட தெரி யாத சில முட்டாள்கள் இலங் கைத் தமிழ் அரசுக் கட்சிமீதும் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் மோசடி செய்ததாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத் துள்ளனர்.

நாங்கள் எவ்வளவோ ஊழல் மோசடிகளை வெளிப்படுத்தி உள்ளோம். எங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்ததனால்தான் அதிகூடிய வாக்குகளை தந்தார் கள். ஒருசிலர் எமக்கு அவப் பெயரை உருவாக்கப் பார்க்கின் றார்கள்.

அரசாங்கம் செய்யும் கைது நடவடிக்கைகளை நாங்கள் வர வேற்கின்றோம். ஆனால், நாம் எதிர்பார்ப்பது என்னவெனில் அரசாங்கத்தின் நடவடிக்கை லில் கடந்த ஒரு வருடத்தில் சேக ரித்த நிதி எங்கே? அந்த நிதியைக் கொண்டு வந்து அபிவிருத்தி செய்யுங்கள்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா...

கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று அவர் சென்றபோதே கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## சர்வதேச...

நேற்றைய போராட்டத்தில் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். அத்துடன், வடக்கு - கிழக்கை சேர்ந்த பொது அமைப்புகள், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக அம்பாறையின் தம்பிலுவில் பகுதியில் சுழற்சி முறையில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

## மன்னாரில்...

போக்குவரத்து சேவை முற்றாக முடங்கியது. மீனவர்களும் கடலுக்கு செல்லவில்லை. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணியில் மாவட்டம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடினர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பிலிருந்தும் சுற்றுச்சூழல் ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர். அத்துடன், வடக்கின் பல பகுதிகளிலிருந்தும் சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் பேரணி மைதானத்தில் இருந்து பொது மருத்துவமனை வீதி ஊடாக நகர்ந்து, பொலிஸ் நிலைய வீதி வழியே மன்னார் பஜாரை அடைந்தது. அங்கு கோஷங்களை எழுப்பிய போராட்டக்காரர்கள் பின்னர் மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் போராட்டக்காரர்களை சந்தித்தார். அவரிடம், ஜனாதிபதிக்கான மனுவை போராட்டக்காரர்கள் கையளித்தனர். அதனைப் பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் உடனடியாக மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கு சென்றனர்.

இதன்போது, போராட்டக்கார்கள் மீது தாக்குதலை நடத்திய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

இதையடுத்து, அங்கு நின்ற பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது. இதனால், அந்த இடத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் அழைக்கப்பட்டனர். எனினும், போராட்டத்தில் பங்கேற்றிருந்த மதத் தலைவர்கள் தலையிட்டு நிலைமையை சுமுக நிலைக்குக் கொண்டு வந்தனர்.

கனிய மணல் அகழ்வை நிறுத்த வேண்டும், காற்றாலை மின்சார திட்டத்தை நிறுத்த வேண்டும், போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை அவசியம் ஆகிய விடயங்களை போராட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தியதுடன், அது தொடர்பிலான கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்டம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மன்னார்...

பிரதிநிதிகளுடன் அர்த்தமுள்ள உரையாடல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் உத்தரவுகள் மக்களின் விருப்பங்களை மீறுகின்றன. அமைதியாகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோரை பொலிஸார் மூலம் துன்புறுத்துவதை கண்டிக்கிறோம். அரசாங்கம் பொதுமக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். நாம் வளர்ச்சியை ஆதரிக்கிறோம். ஆனால், மக்களை துன்புறுத்துவதன் மூலம் அல்ல" என்று தனது எக்ஸ் பதிவில் நாமல் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சிங்களவர்...

நிலைப்பாடாகும். எனக்காக உயிர் நீத்தவர்களுக்காக நான் முன்னிற்கிறேன். ஆனால், இந்த நாட்டு மக்கள் தமக்காக உயிர் நீத்த இராணுவத்தினருக்காக முன்னின்ற தமது தலைவரை காட்டிக் கொடுத்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் தலைவர் அல்லர். ஆனால், அவர் சிங்கள மக்களின் தலை வராவார். எனினும், அவர்கள் மகிந்த ராஜபக்ஷவை காட்டிக் கொடுத்துள்ளனர்.

நாமல் உள்ளிட்டோர் கள்வர்கள் எனக் கூறியபோது நானும் அதனை நம்பினேன் - முழு நாடும் அதை நம்பியது. பொய் கூறியவர்களுக்கு மேலாகப் பெரும் பொய்களைக் கூறுபவர்கள் வந்ததும் அனைவரும் அவர்களை நம்பினர். ஆனால், இறுதியில் அவர்களின் பொய்கள் அனைத்தும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

எனக்காக முன்னிலையானமைக்காக நாமலுக்கு மதிப்பளிக்கிறேன். நாமல் தவறிழைத்துள்ளார் எனில் அவருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும். அதனை விடுத்து சிறுபிள்ளைத்தனமாக செயல்பட வேண்டாம். தும்புத்தடி எழுந்து பாராளுமன்றத்தில் உரையாற்றுவதாக சில எம். பி. க்கள் தெரிவித் துள்ளனர். நான் தும்புத்தடியாக இருக்கிறேனா அல்லது அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அவ்வாறு இருக்கிறார்களா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாததால் எம்மைப் போன்றவர்களை இலக்கு வைக்கின்றனர். ஒன்றில் என்னைக் கைது செய்வர். அல்லது சாமர சம்பத் தசநாயக்கவை கைது செய்வர். நாமிருவரும் இல்லை என்றால் ஆளுங்கட்சிக்கு அரசியலும் இல்லை - என்றார். (ஐ)

## குண்டு...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

படுகாயமடைந்தவர்களில் ஒருவரான அனுராஜ் தனது தாயாரின் வீட்டுக்கு படுகாயமடைந்த மற்றையவரையும் அழைத்துச் சென்றுள்ளார். இருவரும் அந்தப் பகுதியில் வெடிக்காத குண்டுகளை எடுத்து அவற்றிலிருந்து வெடி மருந்து சேகரித்து வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், இருவரும் நேற்றைய தினம் பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து மோட்டார் குண்டு ஒன்றை எடுத்து அதனைப் பிரித்து, அதிலிருந்த வெடி மருந்தை எடுக்க முயன்றுள்ளனர். அப்போது, அந்தக் குண்டு வெடித்ததில் இருவரும் படுகாயமடைந்தனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, இருவரும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவருக்கு இரு கால்களும் கடுமையாக சிதைந்தமையால் சத்திர சிகிச்சை மூலம் அவை வெட்டி அகற்றப்பட்டன என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# லலித், குகனின் உறவினர்கள் சி.ஐ.டியில் நேற்று வாக்குமூலம்

கொழும்பு, செப். 30

யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட முன்னிலை சோஷலிசக் கட்சியின் செயல்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தம் ஆகியோரின் உறவினர்கள் நேற்று திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் அளித்தனர்.

இதன்போது, முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜயகொட, லலித் குமாரின் தந்தை ஆறுமுகம் வீரராஜ் ஆகியோரும் முற்பட்டிருந்தனர்.

இதன்போது, அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"இந்த விசாரணைகள் தொடர்பாக யாழ்ப்பாணம், கொழும்பு நீதிமன்றங்களில் பல தடவைகள் முன்னிலையாகியுள்ளோம். அத்துடன், இந்த வழக்கின் நிமித்தம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் முற்படுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும், அவர் இதுவரை முற்படவில்லை. மீண்டும் ஒருமுறை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு விசாரணைக்கு எம்மை அழைத்துள்ளனர். இந்த அரசாங்கத்திடமிருந்து நூற்றுக்கு நூறு வீதம் நீதி கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம்", லலித்தின் தந்தை ஆறுமுகம் வீரராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, புபுது ஜயகொட கருத்துத் தெரிவிக்கையில்,

2011ஆம் ஆண்டு இந்த இருவரும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் குறைந்தபட்சம் இந்த அரசாங்கத்திலாவது நீதி கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். 2011ஆம் ஆண்டு, அப்போதைய ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, லலித் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்படவில்லை அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறியிருந்தார்.

எனவே, கைது செய்யப்பட்டவர்கள் எவ்வாறு காணா மல் போனார்கள் என்பதில் பெரும் சந்தேகம் உள்ளது. இந்த அரசாங்கத்தில் இந்த விடயத்துக்கு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்", என்றார். (ஐ)

# கிறிஸ்தவ தேவாலயத்தில் ஒரே பாலின திருமணம்!

## பேராயரின் தகவலால் சர்ச்சை

கொழும்பு, செப். 30

நாட்டில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் ஒரே பாலினத் திருமணம் இடம்பெற்றுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் அவர் வெளியிட்ட தகவல் கத்தோலிக்க சமூகத்தினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின் போது உரையாற்றிய கர்தினால், இலங்கை பெண்கள் இருவர் திருமணத்தை நடத்தும் அருட்தந்தையை ஏமாற்றி தேவாலயத்தில் திருமணம் செய்துள்ளனர். "இந்த பெண்களில் ஒருவர் ஹோர்மோன் மாத்திரைகளை பயன்படுத்தி தனது தோற்றத்தை ஆண் போல மாற்றியிருந்தார். அவருக்கு முகத்தில் உரோமங்கள் இருந்ததால் மத குரு ஏமாற்றப்பட்டார். இந்த சம்பவம் இலங்கையிலேயே நடந்தது," என்று கர்தினால் தெரிவித்தார்.

இதனிடையே, ஒரே பாலினத் திருமணங்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட கர்தினால், "இரண்டு ஆண்களோ அல்லது இரண்டு பெண்களோ திருமணம் செய்தால், அவர்களால் எவ்வாறு சரியான குடும்ப வாழ்க்கையை நடத்த முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

இதேநேரம், நாட்டில் எல். ஜி. பி. ரி. கியூ சுற்றுலாவை ஊக்குவிப்பதான அரசாங்கத்தின் முயற்சிகளையும் விமர்சித்த அவர், ஏற்றுக்கொள்ள முடியாத ஆசைகளை நிறைவேற்ற வரும் வெளிநாட்டவர்களால் நமது இளைஞர்கள் பலியாக அனுமதிக்கக்கூடாது என்றும் தெரிவித்தார். அத்துடன், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இதன் தீவிரத்தைப் புரிந்துகொள்வார் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மகிந்தவை சந்தித்த ஜீவன்!

கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நேற்று முன் தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறி தற்போது தங்காலை கால்டன் இல்லத்தில் வசித்து வரும் முன்னாள் ஜனாதிபதியை மரியாதை நிமித்தம் சந்தித்து சிநேகபூர்வமாக ஜீவன் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

## யாழ்....

அமைச்சர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2022 மார்ச் 21ஆம் திகதி அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது. சுமார் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த நிலையம் மறுநாளே மூடப்பட்டது.

சுமார் மூன்றரை வருடங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட இந்த நிலையத்தை மீள இயக்குவது தொடர்பில் வர்த்தக - வாணிப அமைச்சர் தலைமையில் கடந்த மாதம் கலந்துரையாடப்பட்டது.

இதைத் தொடர்ந்தே இன்றைய தினம் யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மிக ஆபத்தான...

பிடிக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என்று பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் மற்றும் பிற போதைப்பொருட்களை விட மெபெட்ரோன் மிகவும் ஆபத்தானது என்று அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இந்தப் போதைப்பொருள் வெலிகம பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டது. அத்துடன், மோல்டா நாட்டை சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஜப்பானிய பிரதமருடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு

**உடன்படிக்கையும் கைச்சாத்து**

கொழும்பு, செப். 30

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று அந்த நாட்டின் பிரதமர் ஷிகெரு இஷிபாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜப்பான் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், இரு நாடுகளின் பொருளாதாரம், முதலீடு, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உயர் மட்டக் கலந்துரையாடலில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங் கமுவ உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, இலங்கை கடற்படைக்கு சுமார் 500 மில்லியன் யென் மதிப்புள்ள 10 கண்காணிப்பு ஆளில்லா விமானங்களை வழங்குவதற்கு ஜப்பான் தரப்பில் இணக்கம் வெளியிடப்பட்டது.

ஜப்பானின் உத்தியோகபூர்வ பாதுகாப்பு உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் முதலாவது பாதுகாப்பு உபகரண உதவி இதுவாகும்.

சந்திப்புக்குப் பின்னர் கூட்டு ஊடகசந்திப்பில் உரையாற்றிய ஜப்பானிய பிரதமர் ஷிகேரு இஷிபா, "இந்தியப் பெருங்கடலில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கையின் ஸ்திரத்தன்மையும் அபிவிருத்தியும் மிகவும் முக்கியமானவை" என்று வலியுறுத்தினார்.

இதனையடுத்து, உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமைதியான மற்றும் நிலையான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை உருவாக்குவதற்கான தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதேவேளை, சிறிய பால் பண்ணையாளர்களின் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்திலும் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர்.

இதனூடாக, பாலை பதப்படுத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைக்கு தேவையான உபகரணங்களுக்காக 463 மில்லியன் யென் மானிய உதவியை ஜப்பான் வழங்குகிறது. (அ)

## 24 மணி நேரமும் பொய்கூறும் அரசு

**சஜித் பிரேமதாஸ சீற்றம்**

கொழும்பு, செப். 30

**"ஜனாதிபதி அநுரவின் அரசு 24 மணிநேரமும் பொய்களைப் பரப்புகின்றது. பொய்களையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றது." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச தரப்பினர் பொய்களாலும், குழப்பங்களாலும் மக்களை ஏமாற்றுவதில் வல்லவர்கள். இவ்வாறான ஏமாற்றுச் செயற்பாடுகளால் தம்மைத் தக்கவைத்துள்ளனர். 24 மணிநேரமும் இவ்வாறு பொய் பேசும் அரசு இலங்கையில் இதுவரை இருந்ததில்லை. பொய்கள் மட்டும்தான் அரசின் பிரதான கொள்கையாக மாறியுள்ளன.

அண்மைக்காலமாக போதைப் பொருள்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் அரசால் பல்வேறு பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. போதைப்பொருள் காரணமாக நாடும் சீரழிந்து வருகிறது. எனவே, அவற்றைக் கண்டுபிடித்து அழிப்பது சிறந்த செயலாகும்.

அதேநேரம், துறைமுகத்தில் இருந்து அனுமதியில்லாமல் கொள்கலன்களை விடுவித்த விவகாரம் தொடர்பில் அரசு மௌனமாக உள்ளது.

மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசுக்கு மக்கள் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. மாகாண சபைத் தேர்தலில் பொய், மோசடி, குழப்பம், ஏமாற்றுதல் ஆகியவற்றைத் தோற்கடிக்குமாறு மக்களிடம் கோருகின்றோம் - என்றார். (அ)

## சிறுவர் மத்திய நிலையத்தில் 15 சிறுவர்கள் தப்பியோட்டம்!

கொழும்பு, செப். 30

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தலைமையில் இயங்கி வரும் மாகொல சிறுவர் மத்திய நிலையத்தில் இருந்து 15 சிறுவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக சப்புகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

16 மற்றும் 17 வயதுடைய சிறுவர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுவர்கள் கடந்த 27 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் சிறுவர் மத்திய நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற சிறுவர்கள் நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறுவர் மத்திய நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சிறுவர்களுக்கு எதிராக பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் கண்டி, கொழும்பு, மாளிகாகந்த மற்றும் கடுவலை ஆகிய நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு வருவதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## இந்தியாவுடன் எரிசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் அவதானம்!

கொழும்பு, செப். 30

தற்போது இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, இந்தியாவின் மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் சிறி பிரகலாத் ஜோஷியை சந்தித்து கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துதல், நடந்து வரும் கூட்டுத் திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல் மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வது குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகள் கவனம் செலுத்தின.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான குறைந்தபட்ச விலையை உறுதி செய்வதற்கான போட்டி கொள்முதல் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல், இந்திய உதவியுடன் இலங்கையில் சூரிய சக்தி பேனல் உற்பத்தி வசதியை நிறுவுதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இலங்கையர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த விவாதங்களில் இடம்பெற்றன.

இந்த கலந்துரையாடல்களின்போது பல முதற்கட்ட ஒப்பந்தங்கள் எட்டப்பட்டதாக எரிசக்தி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய எரிசக்தி நிறுவனங்களின் கட்டமைப்பு மாதிரிகள் மற்றும் இலங்கையில் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் எரிசக்தித் துறை இலக்குகளை அடையவும் இந்த மாதிரிகளை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது குறித்தும் அமைச்சர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (அ)

## மாகாண தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடத் தயார்!

கொழும்பு, செப். 30

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து மாகாணசபைத் தேர்தலை எதிர்கொண்டால் முதல்வர் வேட்பாளராக களமிறங்குவதற்கு தயார் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து பயணிப்பதற்குரிய பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன. ஐதேக முகாம் ஓரணியில் திரள வேண்டும்.

ஐதேகவுக்கென 40 லட்சம் வாக்கு வங்கி உள்ளது. ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியிலேயே நான் ஈடுபட்டு வருகின்றேன்.

இரு தரப்புகளினதும் தனித்துவத்தை பாதுகாத்துக் கொள்ளலாம். உதாரணமாக மாகாணசபைத் தேர்தல் வந்தால் ஒரு தரப்பு சார்பில் பொதுபட்டியலில் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு நான் தயார். அவ்வாறு போட்டியிட்டால் என்னால் வெற்றிபெற முடியும். இணைவதற்கு இவ்வாறு பல வழிமுறைகள் உள்ளன.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் உட்பட கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த மனதுடன் தலைமைப்பதவியை எனக்கு வழங்கும் பட்சத்தில் அதனை ஏற்பதற்கு தயாராக இருக்கின்றேன்- என்றார். (அ)

## தங்காலை போதைப்பொருள் வழக்கு: 4 சந்தேக நபர்கள் விளக்கமறியலில்!

கொழும்பு, செப். 30

தங்காலை - சீனிமோதர பகுதியில் அண்மையில் 624 கிலோகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தங்காலை நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

முன்னதாக, தங்காலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த 22 ஆம் திகதி காவல்துறையினர் நடத்திய சோதனையின்போது, மூன்று பாரவூர்திகளிலிருந்து சுமார் 624 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன. (அ)

## அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 105 வியாபார நிலையங்கள் மீது வழக்கு!

கொழும்பு, செப். 30

கடந்த இரண்டு வாரங்களில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலையில் அரிசியினை விற்பனை செய்த 105 வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளது.

இவ்வழக்குகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக அரிசி விற்பனை செய்யும் எவருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது மேலும் வலியுறுத்தியது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் கூற்றுப்படி, ஒரு தனி உரிமையாளர் அத்தகைய குற்றத்தில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டால், உரிமையாளருக்கு ரூ. 100,000 முதல் ரூ. 500,000 வரை அபராதம் விதிக்கப்படலாம், அல்லது ஐந்து மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் சட்டத்தின் கீழ், ஒரு தனியார் நிறுவனம் கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாக அரிசி விற்பனை செய்ததாகக் கண்டறியப்பட்டால், நீதிமன்றம் ரூ. 500,000 முதல் ரூ. 5 மில்லியன் வரை அபராதம் விதிக்கலாம் என்று அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு இதுவரை அரிசி தொடர் பான 3,000 இற்கும் மேற்பட்ட சோதனைகளை நுகர் வோர் அலுவல்கள் அதிகார சபை நடத்தியுள்ளது.

இவற்றில், 1,000 இற்கும் மேற்பட்ட வழக்குகளில் ஏற்கனவே சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக அண்மைய ஊடக சந்திப்பில் விவரங்களை வெளியிட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org